**எம்பிலிபிடிய நகர சபையி - 2023**
-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எம்பிலிபிடிய நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து எம்பிலிபிடிய நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடப்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கிராமியப் பொருளாதாரம் தொடர்பான அமைச்சின் ரூபா 15,993,900 தொகையான எம்பிலிய பொருளாதார நிலையத்தின் காணி நகரசபையின் ஒரு சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்வேன். | சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 3,842,752 தொகையான 03 நிர்மாண வேலைகள் மற்றும் கணனி துணைக் கருவிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ஒரு காணி ரூபா 318,700 தொகைக்கு மூலதனமாக்கப்பட்டிருந்தது. அது பொறுப்பேற்கப்படாததனால் பணம் மீளக் கிடைத்திருந்தும் அது நடைமுறையற்ற சொத்துக்களிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | உடைத்து அகற்றப்பட்ட வாகன நிலையத்தின் பெறுமதி ரூபா 410,303 கணக்கிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டிற்கான ஆரம்ப இருப்பு ரூபா 1,313,622 தொகை இருப்புக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பொதுக் கணக்கிலிருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபை கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 4,500,000 பணம் மாற்றுதல் ஒரு செலவு மற்றும் ஒரு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்பாடமைக்கு நடவடிக்கை எடுப்பேன். | -மேற்படி- |
| (எ) | சம்பள மீளளிப்பிற்காக 2023 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4,626,023 தொகை கிடைக்க வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371 (5) இன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 150,000 முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இம்முற்பணம் இன்றுவரை தீர்த்துவைக்கப்படவில்லை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 24,752,687 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 26,452,472 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | 2023 பட்டியலிடப் பட்ட வருமானம் ரூபா | 2023 சேகரிக்கப்ப ட்ட வருமானம் ரூபா | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவை ரூபா | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | 2022 பட்டியலிடப் பட்ட வருமானம் ரூபா | 2022 சேகரிக்கப்ப ட்ட வருமானம ரூபா | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| வீத வரியும் வரியும் | 18,516,000 | 19,498,383 | 25,412,093 | 56,414,123 | 18,303,000 | 19,456,728 | 13,686,874 | 61,541,824 |
| வாடகை | 26,166,600 | 15,013,014 | 16,639,562 | 3,487,716 | 25,334,200 | 11,746,140 | 13,042,383 | 6,131,941 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 3,783,500 | 4,385,339 | 4,332,839 | 211,500 | 3,156,500 | 1,891,797 | 1,766,796 | 589,000 |
| ஏனைய வருமானம் | 11,285,700 | 12,764,873 | 6,692,136 | 10,000 | 10,089,700 | 7,390,232 | 6,924,468 | - |
| மொத்தம் | 59,751,800 | 51,661,609 | 53,076,630 | 60,123,339 | 56,883,400 | 40,484,897 | 35,420,521 | 68,262,765 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 04 ஆண்டுகளுக்கும் 15 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் பழைமையான ரூபா 3,033,281 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பஸ் நிறுத்துமிடத்திலுள்ள 22 கடடைகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் உடன்படிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்காமை முதலிய விடயங்களினால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதுள்ளது. அந்த நிலுவைப் பணத்தை பதிவழிப்பதற்காக கௌரவ ஆளுநருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் சேகரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டினையும் உள்ளடக்கிய முன்னைய 05 ஆண்டுகளுக்காக ரூபா 520,000 தொகையான முச்சக்கர வண்டி கட்டணம் நிலுவையாகக் காணப்பட்டது. முச்சக்கர வண்டிச் சங்கத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலில் இணக்கப்பாடு இல்லாமை இதற்கு காரணமாக இருந்தது. | இதற்காக தனியான உப நியதிச் சட்டம் இல்லை. பொதுவான உப நியதிச் சட்டத்தின் பிரகாரம் இக்கட்டணம் அறவிடப்படுவதனால் கட்டணம் செலுத்தாமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | உப நியதிச் சட்டத்தினை ஏற்படுத்துவதற்கும் கட்டணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. |
| (இ) | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான நிலுவையாக உள்ள வீதவரி ரூபா 43,391,747 தொகை இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இறுதி அறிவித்தலினை அனுப்பி ஆதனத்தை தடை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சட்டரீதியற்ற ஒரு கட்டிடத்தினை உடைத்து அகற்றுவதற்கு எதிராக வழங்கிய நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இழப்பீடு செலுத்த வேண்டியிருந்ததனால் சபைக்கு ரூபா 976,600 நட்டம் ஏற்பட்டிருந்தது. | நீதிமன்ற கட்டளைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | சபைக்கு ஏற்பட்ட நட்டத்தினை அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மூன்று வழி மின்சாரம் இல்லாமையால் 2022 யூலை மாதம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 950,000 தொகையான பெலர் இயந்திரம் 2023 திசெம்பர் மாதம் வரை பயன்படுத்தாது காணப்பட்டது. | மின்சார வழங்கலினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் துரிதமாக இந்த இயந்திரத்தினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நகரசபை புதிய அலுவலக கட்டடிடத்தினை நிர்மாணிக்கும் போது ரூபா 755,770 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.<br>மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது சப்ரகமுவ மாகாண கட்டிட விலை விகிதத்திற்குப் பதிலாக மேல் மாகாண கட்டிட விலை விகிதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | மிகைக் கொடுப்பனவினை நிறுத்திவைத்தல் பணத்திலிருந்து கழித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமாக ஆலோசனை நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பதிலுடன் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | மிகைக் கொடுப்பனவினை அறவீடு செய்தல் வேண்டும். |